IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.23/2021

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SUNDHARRAJAN |
| FATHER'S NAME | : | PERUMAL |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | RETIRED VILLAGE ASST. |
| AGE | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 07.03.2013 அன்று காலை 07.30 மணியளவில் பரதாரமி காவல் நிலையத்தில் இருந்து காவல் உதவி ஆய்வாளர் என்னையும், VAO அவர்களையும் வரசொன்னார். நாங்கள் காவல் நிலையம் சென்ற பின்னர் சவுரி மற்றும் ஆனந்தராஜ் என்பவரைகளை விசாரணை செய்து என்னிடமும், VAOஅவர்களிடமும் கையொப்பம் பெற்றனர். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையம் சென்றபோது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்பட்ட 2 கையொப்பமும் காவல் நிலையத்தில் வைத்து செய்துகொடுத்ததுதான். போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. கையொப்பம் செய்த பின்னர் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் விசாரணை செய்யவில்லை என்றாலும்,போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் கையொப்பம் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.